Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.97/2023 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 2 |
| | | Defence | |
| Name | | திரு.கொம்பையா | |
| Father's Name | : | திரு.ராதாகிருஷ்ணன் | |
| Village | : | ரெட்டியார்பட்டி | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 29 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of July 2026.

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது ரெட்டியார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி முத்துராமலிங்கம் என்பவரை தெரியாது. இறந்துபோன சுப்பிரமணியத்தை தெரியும். மேற்படி சுப்பிரமணியம் இறந்துபோய்விட்டார். ஆஜர் 4 எதிரிகளில் 1வது எதிரி மட்டும் தெரியும். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 21.05.2022 ம் தேதி நான் வள்ளியூரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது ரெட்டியார்பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு வந்துகொண்டிருந்தேன். எனது அம்மாவை ஊருக்கு செல்வதற்காக நான் திருநெல்வேலி புது பஸ் ஸ்டாண்டிற்கு கொண்டு வந்து பஸ்சில்

ஏற்றிவிட்டேன். எனது நண்பர் முருகேசன் என்பவர் எனக்கு போன் செய்தார். நான் சி.எஸ்.ஐ கிரவுண்டிற்கு சென்றேன். அங்கு சரவணனும், முருகேசனும் மதுஅருந்திக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களுடன் எப்போது போல் அவர்களிடம் அரைமணிநேரத்திற்கு மேல் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது சுப்பிரமணியன் பைக்கில் வந்தார். நாங்கள் இருக்கும் இடம் தெரியாமல் அங்கு பல்வேறு நபர்கள் மதுஅருந்திக்கொண்டிருந்த இடத்திற்கு சென்றுவிட்டார். நாங்கள் சற்றுநேரம் பொறுத்துயிருந்தும் சுப்பிரமணியன் எங்களை நோக்கி வராததால் நாங்கள் கிளம்பாலாம் என்று முடிவு செய்து எழுந்து அவர் இருக்கிறாரா என்று சுமார் 200 அடி தள்ளிப்போய் பார்த்தபோது பைக் உடன் இருந்து கீழே விழுந்து கிடந்தார். அவருக்கு அங்கேங்கே சிராய்ப்பு காயங்கள் இருந்தது. அவர் மது அருந்தியிருந்தார். அவர் போதையில் பைக்கை பிடித்துக்கொண்டி வலிக்கிறது என்று பேசிக்கொண்டிருந்தார். நானும், முருகேசனும் அவரை பைக்கில் வைத்து என்.ஜி.ஓவில் லீலா கிளினிக் அழைத்து சென்றோம். அங்கு அவருக்கு மருத்துவம் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டதால் நாங்கள் ராயல் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவர்களும் அங்கு பார்க்கமுடியாது என்று சொல்லி ஹைகிரவுண்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொல்லிவிட்டார்கள். பின்னர் நாங்கள் ஹைகிரவுண்டு மருத்துவமனையில் அவரை சேர்த்தோம். எனக்கு தெரிந்த நண்பர் வெங்கடேசன் என்பவரை வரச்சொல்லி அவரை உள்நோயாளியாக சேர்த்தோம். அரைமணிநேர சிகிச்சை நடந்துகொண்டிருக்கும்போது அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னதால் அவருடைய பெற்றோர்களுக்கு தகவல் சொல்வதற்கு என்னிடம் செல் நம்பர் எதுவும்

இல்லாததால் முருகேசன் இறந்துபோன சுப்பிரமணியத்தின் செல்போனை எடுத்து அவருடைய அண்ணன் என்று குறிப்பிட்டுயிருந்த நம்பருக்கு போன் செய்து தகவல் சொன்னோம். நடுஇரவு நேரம் ஆனதால் அவரது அப்பா மருத்துவமனைக்கு வந்தார். நாங்கள் காலை 9.00 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டோம். அதன்பிறகு பெருமாள்புரம் காவல்நியைலத்தில் இருந்து எங்கள் வீட்டிற்கு வந்து காவல்நிலைய விசாரணைக்கு அழைத்து வந்தார்கள். என்னை விசாரித்துவிட்டு கையெழுத்து வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டார்கள். அதைப்பற்றி மீண்டும் ஒருமுறை போலிசார் என்னை அழைத்து விசாரித்தார்கள். அப்போதும் எனக்கு தெரிந்தபடி தான் சொன்னேன்.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

என்னை போலிசார் விசாரித்த போது 21.05.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு மேல் சி.எஸ்.ஐ சர்ர்ச் க்கு சொந்தமான காலி இடத்திற்கு சென்றபோது சரவணனும், முருகேசனும் மது அருந்திக்கொண்டிருந்தார்கள் என்றும், நான் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன் என்றும், எங்களுக்கு அருகில் இட்டேரி ஜே.ஜே நகரை சேர்ந்த கருப்பசாமி மகன் சிவநம்பி, பாப்பான்குளம் அம்பேத்கார் நகரை சேர்ந்த சுடலைக்கண்ணு மகன் செந்தில்முருகன், ஆலடிப்புதுார்பிள்ளையார்கோவில் தெருவைச்சேர்ந்த மாடாசாமி மகன் வடிவேல், மூன்றடைப்பு வடக்கு கரந்தநேரி தெற்கு தெருவை சேர்ந்த

நம்பிராஜன் மகன் பொன்பாண்டி ஆகியோர் மது அருந்திக்கொண்டிருந்தபோது இறந்துபோன சுப்பிரமணியன் TN 72 BQ 2319 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றும், அந்த சமயத்தில் சுப்பிரமணியத்திற்கும், மேற்படி எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு நாங்கள் சமாதானப்படுத்தி உட்கார வைத்தோம் என்றும், அப்போது சிவநம்பி என்னை பார்த்து கேலி செய்து கொண்டுயிருந்தார் என்றும், கேலிசெய்யவேண்டாம் என்று முருகேசன் சொன்னார் என்றும், அந்த சமயத்தில் 1ம் எதிரியும், மற்ற எதிரிகளும் சுப்பிரமணியத்தை எழவிடாமல் கையால் அடித்த காலால் மிதித்தும் அவருக்கு தலையில் ஊமைக்காயம் ஏற்பட்டு மயங்கிவிழுந்துவிட்டார் என்றும், நாங்கள் தடுக்க சென்றபோது யாராவது கிட்டவந்தால் உங்களையும் அடித்து, உதைத்துவிடுவோம் என்று கொலைமிரட்டல் விடுவிட்டு 1வது எதிரியும், 2வது எதிரியும் TN72 BR 1726 என்ற புல்லட்டில் சென்றுவிட்டார் என்றும், மற்ற எதிரிகள் இருவரும் TN 75 L 1210 என்ற இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்றும் நானும், முருகேசனும், சுப்பிரமணியன் வந்த பல்சரில் அவரை மருத்துவமனையில் எடுத்து சென்றேன் என்று சொல்லிவிட்டு மற்ற முக்கியமான விவரத்தை எதிரிகளை பார்த்து பயந்துகொண்டு சொல்லாமல் தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

<table>
<tr><td>IN THE COURT OF`</td><td colspan="3">I ADDITIONAL DISTRICT COURT<br>TIRUNELVELI</td></tr>
<tr><td>Calendar</td><td rowspan="4"></td><td colspan="2">SC.No.97/2023</td></tr>
<tr><td>Miscellaneous</td><td></td><td></td></tr>
<tr><td>Preliminary Register</td><td></td><td></td></tr>
<tr><td>Sessions</td><td></td><td></td></tr>
<tr><td rowspan="2">Deposition of Witness for</td><td rowspan="2"></td><td>Prosecution</td><td>P.W. 3</td></tr>
<tr><td>Defence</td><td></td></tr>
<tr><td>Name</td><td></td><td colspan="2">திரு.முருகேசன்</td></tr>
<tr><td>Father's Name</td><td>:</td><td colspan="2">திரு.கந்தன்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td colspan="2">ரெட்டியார்பட்டி</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td colspan="2">பாளையங்கோட்டை</td></tr>
<tr><td>Calling</td><td>:</td><td colspan="2">அரசு தரப்பு சாட்சி</td></tr>
<tr><td>Age</td><td>:</td><td colspan="2">32</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of July 2026.

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது ரெட்டியார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி முத்துராமலிங்கம் என்பவரை தெரியும். இறந்துபோன சுப்பிரமணியத்தை தெரியும். சாட்சிகள் கொம்பையா, சரவணனை தெரியும். நானும் சரவணனும் சி.எஸ்.ஐ கிரவுண்டில் மது அருந்திக்கொண்டிருதோம். அப்போது நான் போன் செய்து கொம்பையாவை வரச்சொன்னேன். அவர் வந்து எப்போது போல் எங்களிடம் அரைமணிநேரத்திற்கு மேல் பேசிக்கொண்டிருந்தார். அப்போது சுப்பிரமணியன் பைக்கில் வந்தார். நாங்கள் இருக்கும் இடம் தெரியாமல் அங்கு பல்வேறு நபர்கள்

மதுஅருந்திக்கொண்டிருந்த இடத்திற்கு சென்றுவிட்டார். நாங்கள் சற்றுநேரம் பொறுத்துயிருந்தும் சுப்பிரமணியன் எங்களை நோக்கி வராததால் நாங்கள் கிளம்பாலாம் என்று முடிவு செய்து எழுந்து அவர் இருக்கிறாரா என்று சுமார் 200 அடி தள்ளிப்போய் பார்த்தபோது பைக் உடன் இருந்து கீழே விழுந்து கிடந்தார். அவருக்கு அங்கேங்கே சிராய்ப்பு காயங்கள் இருந்தது. அவர் மது அருந்தியிருந்தார். அவர் போதையில் பைக்கை பிடித்துக்கொண்டி வலிக்கிறது என்று பேசிக்கொண்டிருந்தார். நானும், கொம்பையாவும் அவரை பைக்கில் வைத்து என்.ஜி.ஓவில் லீலா கிளினிக் அழைத்து சென்றோம். அங்கு அவருக்கு மருத்துவம் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டதால் நாங்கள் ராயல் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவர்களும் அங்கு பார்க்கமுடியாது என்று சொல்லி ஹைகிரவுண்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொல்லிவிட்டார்கள். பின்னர் நாங்கள் ஹைகிரவுண்டு மருத்துவமனையில் அவரை சேர்த்தோம். எனக்கு தெரிந்த நண்பர் வெங்கடேசன் என்பவரை வரச்சொல்லி அவரை உள்நோயாளியாக சேர்த்தோம். அரைமணிநேர சிகிச்சை நடந்துகொண்டிருக்கும்போது அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னதால் அவருடைய பெற்றோர்களுக்கு தகவல் சொல்வதற்கு என்னிடம் செல் நம்பர் எதுவும் இல்லாததால் என்னிடம் சொன்னதால் நான் இறந்துபோன சுப்பிரமணியத்தின் செல்போனை எடுத்து அவருடைய அண்ணன் என்று குறிப்பிட்டுயிருந்த நம்பருக்கு போன் செய்து தகவல் சொன்னோன். நடுஇரவு நேரம் ஆனதால் அவரது அப்பா மருத்துவமனைக்கு வந்தார். அன்றிரவே போலிசார் அங்கு வந்து என்னிடம் விசாரித்தார்கள். நாங்கள் காலை 9.00 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டோம். அதன்பிறகு

பெருமாள்புரம் காவல்நியைலத்தில் இருந்து எங்கள் வீட்டிற்கு வந்து காவல்நிலைய விசாரணைக்கு அழைத்து வந்தார்கள். என்னை விசாரித்துவிட்டு அனுப்பிவிட்டார்கள். அதைப்பற்றி மீண்டும் ஒருமுறை போலிசார் என்னை அழைத்து விசாரித்தார்கள். அப்போதும் எனக்கு தெரிந்தபடி தான் சொன்னேன்.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

என்னை போலிசார் விசாரித்த போது 21.05.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு மேல் சி.எஸ்.ஐ சர்ர்ச் க்கு சொந்தமான காலி இடத்திற்கு சென்றபோது நானும், சரவணனும் மது அருந்திக்கொண்டிருந்தோம் என்றும், அங்கு கொம்பையா வந்து எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார் என்றும், எங்களுக்கு அருகில் இட்டேரி ஜே.ஜே நகரை சேர்ந்த கருப்பசாமி மகன் சிவநம்பி, பாப்பான்குளம் அம்பேத்கார் நகரை சேர்ந்த சுடலைக்கண்ணு மகன் செந்தில்முருகன், ஆலடிப்புதுார் பிள்ளையார்கோவில் தெருவைச்சேர்ந்த மாடாசாமி மகன் வடிவேல், மூன்றடைப்பு வடக்கு கரந்தநேரி தெற்கு தெருவை சேர்ந்த நம்பிராஜன் மகன் பொன்பாண்டி ஆகியோர் மது அருந்திக்கொண்டிருந்தபோது இறந்துபோன சுப்பிரமணியன் TN 72 BQ 2319 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றும், அந்த சமயத்தில் சுப்பிரமணியத்திற்கும், மேற்படி எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு நாங்கள் சமாதானப்படுத்தி

உட்கார வைத்தோம் என்றும், அப்போது சிவநம்பி என்னை பார்த்து கேலி செய்து கொண்டுயிருந்தார் என்றும், கேலிசெய்யவேண்டாம் என்று முருகேசன் சொன்னார் என்றும், அந்த சமயத்தில் 1ம் எதிரியும், மற்ற எதிரிகளும் சுப்பிரமணியத்தை எழவிடாமல் கையால் அடித்த காலால் மிதித்தும் அவருக்கு தலையில் ஊமைக்காயம் ஏற்பட்டு மயங்கிவிழுந்துவிட்டார் என்றும், நாங்கள் தடுக்க சென்றபோது யாராவது கிட்டவந்தால் உங்களையும் அடித்து, உதைத்துவிடுவோம் என்று கொலைமிரட்டல் விடுவிட்டு 1வது எதிரியும், 2வது எதிரியும் TN72 BR 1726 என்ற புல்லட்டில் சென்றுவிட்டார் என்றும், மற்ற எதிரிகள் இருவரும் TN 75 L 1210 என்ற இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்றும் நானும், கொம்பையாவும் சுப்பிரமணியன் வந்த பல்சரில் அவரை மருத்துவமனையில் எடுத்து சென்றேன் என்று சொல்லிவிட்டு மற்ற முக்கியமான விவரத்தை எதிரிகளை பார்த்து பயந்துகொண்டு சொல்லாமல் தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.97/2023 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.4 |
| | | Defence | |
| Name | | திரு.சரவணன் | |
| Father's Name | : | திரு.சண்முகநாதன் | |
| Village | : | ரெட்டியார்பட்டி | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 27 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of July 2026.

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது ரெட்டியார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி முத்துராமலிங்கம் என்பவரை தெரியும். இறந்துபோன சுப்பிரமணியத்தை தெரியும். சாட்சிகள் கொம்பையா, முருகேசன் ஆகியோரை தெரியும். நானும் கொம்பையாவும் சி.எஸ்.ஐ கிரவுண்டில் மது அருந்திக்கொண்டிருதோம். அப்போது முருகேசன் போன் செய்து கொம்பையாவை வரச்சொன்னார். அவர் வந்து எப்போது போல் எங்களிடம் அரைமணிநேரத்திற்கு மேல் பேசிக்கொண்டிருந்தார். அப்போது சுப்பிரமணியன் பைக்கில் வந்தார். நாங்கள் இருக்கும் இடம் தெரியாமல்

அங்கு பல்வேறு நபர்கள் மதுஅருந்திக்கொண்டிருந்த இடத்திற்கு சென்றுவிட்டார். நாங்கள் சற்றுநேரம் பொறுத்துயிருந்தும் சுப்பிரமணியன் எங்களை நோக்கி வராததால் நாங்கள் கிளம்பாலாம் என்று முடிவு செய்து எழுந்து அவர் இருக்கிறாரா என்று சுமார் 200 அடி தள்ளிப்போய் பார்த்தபோது பைக் உடன் இருந்து கீழே விழுந்து கிடந்தார். அவருக்கு அங்கேங்கே சிராய்ப்பு காயங்கள் இருந்தது. அவர் மது அருந்தியிருந்தார். அவர் போதையில் பைக்கை பிடித்துக்கொண்டி வலிக்கிறது என்று பேசிக்கொண்டிருந்தார். முருகேசனும், கொம்பையாவும் அவரை பைக்கில் வைத்து என்.ஜி.ஓவில் லீலா கிளினிக் அழைத்து சென்றோம். அங்கு அவருக்கு மருத்துவம் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டதால் நாங்கள் ராயல் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவர்களும் அங்கு பார்க்கமுடியாது என்று சொல்லி ஹைகிரவுண்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொல்லிவிட்டார்கள். பின்னர் நாங்கள் ஹைகிரவுண்டு மருத்துவமனையில் அவரை சேர்த்தோம். எனக்கு தெரிந்த நண்பர் வெங்கடேசன் என்பவரை வரச்சொல்லி அவரை உள்நோயாளியாக சேர்த்தோம். அரைமணிநேர சிகிச்சை நடந்துகொண்டிருக்கும்போது அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னதால் அவருடைய பெற்றோர்களுக்கு தகவல் சொல்வதற்கு என்னிடம் செல் நம்பர் எதுவும் இல்லாததால் என்னிடம் சொன்னதால் முருகேசன் இறந்துபோன சுப்பிரமணியத்தின் செல்போனை எடுத்து அவருடைய அண்ணன் என்று குறிப்பிட்டுயிருந்த நம்பருக்கு போன் செய்து தகவல் சொன்னோன். நடுஇரவு நேரம் ஆனதால் அவரது அப்பா மருத்துவமனைக்கு வந்தார். நான் வீட்டிற்கு வந்துவிட்டோன். அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

என்னை போலிசார் விசாரித்த போது 21.05.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு மேல் சி.எஸ்.ஐ சர்ர்ச் க்கு சொந்தமான காலி இடத்திற்கு சென்றபோது நானும், முருகேசனும் மது அருந்திக்கொண்டிருந்தோம் என்றும், அங்கு கொம்பையா வந்து எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார் என்றும், எங்களுக்கு அருகில் இட்டேரி ஜே.ஜே நகரை சேர்ந்த கருப்பசாமி மகன் சிவநம்பி, பாப்பான்குளம் அம்பேத்கார் நகரை சேர்ந்த சுடலைக்கண்ணு மகன் செந்தில்முருகன், ஆலடிப்புதூர் பிள்ளையார்கோவில் தெருவைச்சேர்ந்த மாடாசாமி மகன் வடிவேல், மூன்றடைப்பு வடக்கு கரந்தநேரி தெற்கு தெருவை சேர்ந்த நம்பிராஜன் மகன் பொன்பாண்டி ஆகியோர் மது அருந்திக்கொண்டிருந்தபோது இறந்துபோன சுப்பிரமணியன் TN 72 BQ 2319 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றும், அந்த சமயத்தில் சுப்பிரமணியத்திற்கும், மேற்படி எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு நாங்கள் சமாதானப்படுத்தி உட்கார வைத்தோம் என்றும், அப்போது சிவநம்பி கொம்பையாவை பார்த்து கேலி செய்து கொண்டுயிருந்தார் என்றும், கேலிசெய்யவேண்டாம் என்று முருகேசன் சொன்னார் என்றும், அந்த சமயத்தில் 1ம் எதிரியும், மற்ற எதிரிகளும் சுப்பிரமணியத்தை எழவிடாமல் கையால் அடித்த காலால் மிதித்தும் அவருக்கு தலையில் ஊமைக்காயம் ஏற்பட்டு மயங்கிவிழுந்துவிட்டார் என்றும், நாங்கள்

தடுக்க சென்றபோது யாராவது கிட்டவந்தால் உங்களையும் அடித்து, உதைத்துவிடுவோம் என்று கொலைமிரட்டல் விடுவிட்டு 1வது எதிரியும், 2வது எதிரியும் TN72 BR 1726 என்ற புல்லட்டில் சென்றுவிட்டார் என்றும், மற்ற எதிரிகள் இருவரும் TN 75 L 1210 என்ற இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்றும் முருகேசனும், கொம்பையாவும் சுப்பிரமணியன் வந்த பல்சரில் அவரை மருத்துவமனையில் எடுத்து சென்றேன் என்று சொல்லிவிட்டு மற்ற முக்கியமான விவரத்தை எதிரிகளை பார்த்து பயந்துகொண்டு சொல்லாமல் தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.